செ.வெ.எண் : 30 /ஜூன்  நாள் : 14.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## உலக முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினமான ஜூன்-15 முன்னிட்டு முதியோர்களின் தேவையறிந்து அவர்களுக்கு சமுதாயத்தில் முக்கியத்துவம் வழங்கிட உறுதியேற்போம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுருத்தல்

உலக முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினமான ஜூன்-15 முன்னிட்டு, முதியோர்களின் தேவையறிந்து அவர்களுக்கு சமுதாயத்தில் முக்கியத்துவம் வழங்கிட நாம் அனைவரும் உறுதியேற்போம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களின் ஜனத்தொகையானது தற்போது வேகமாக வளர்ந்து வருகிறது. மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவை, நல்ல ஊட்டச்சத்தான உணவு ஆகியவற்றால் தனிப்பட்ட மனிதனின் வாழ்நாள் நீட்டிக்கப்பட்டு வருவதால், 2050-இல் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களின் ஜனத்தொகை 14 சதவீதம் உயரும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. மக்கள் தொகையில் தற்பொழுது வேகமாக அதிகரித்து வரும் முதியோர்களின் எண்ணிக்கை நம்மை மகிழ்ச்சியடைய செய்தாலும், வயது நிமித்தமாக ஏற்படும் தள்ளாமை மற்றும் இயலாமையை சோர்வின்றி உரிய வகையில் சமாளிக்க வேண்டிய கட்டாயமும் நமக்கு உள்ளது.

முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவர்கள் பாதுகாப்பான, கௌரவம் மிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும், முதியோர் நலன் தொடர்பான மத்திய அரசின் வழிகாட்டுதல்கள் / சட்டங்களின் அடிப்படையில் மற்றும் தமிழக அரசின் முதியோர் நல கொள்கைகளின் அடிப்படையின்படி, பல்வேறு திட்டங்களையும் ஆதரவற்ற முதியோரைப் பராமரிக்க முதியோர் இல்லங்கள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

முதியோர் மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கின்றனர். வளர்ந்து வரும் மக்கள் தொகை, உடைந்து போன கூட்டுக் குடும்பம், பொருளாதார பற்றாக்குறை மற்றும் மேல்நாட்டு கலாச்சாரத்தின் சீரழிவு போன்றவை முதியோர்களின் மீதான அக்கறையை குறைக்கின்றது.

ஆகவே நாம் முதியவர்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்கு சமுதாயத்தில் முக்கியத்துவம் அளித்திட இந்த முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு நாளில் நாம் ஒவ்வொருவரும் முதியோர்களுக்கு உதவிட உறுதி ஏற்போம்.

முதியோர்கள் கட்டணமில்லா 1253 என்ற உதவி எண் தொலைபேசி சென்னையிலும், 1800-800-1253 என்ற தொலைபேசி ஏனைய தமிழகத்திலும் சட்டம் மற்றும் மருத்துவ உதவி / முதியோர் இல்லங்களில் சேர்க்கை / முதியோர் பாதுகாப்பு சட்டம் 2007 பற்றிய தகவல்கள் பெற உதவலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**